செய்தி வெளியீடு எண்–707 நாள்–26.08.2008

# செய்தி வெளியீடு

## பெட்ரோல் விற்பனை நிலையங்கள் விடுமுறை இல்லாமல் அனைத்து நாட்களும் முன்பு போலவே செயல்படும்

## மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் அறிவிப்பு

கடந்த வாரம் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் டீசல் தட்டுப்பாடு உள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் அவர்களின் அறிவுரையின் பேரில் தலைமைச் செயலாளர் தலைமையில் 21.8.2008 அன்று எண்ணெய் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அரசுத் துறைகளுடன் கலந்தாலோசனைகள் நடைபெற்றன. இக்கூட்டத்தின் முடிவில் போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைகளின் தேவைகளுக்கு ஏற்ப தேவையான டீசல் கொள்முதல் செய்து, இருப்பு வைத்து அதனை உடனுக்குடன் பெட்ரோல் பங்குகளுக்கு தேவையின் அடிப்படையில் விநியோகிக்கவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும், பெட்ரோல் பங்க்குகள் முறையாக டீசல் விநியோகிப்பதையும் சமூக விரோதிகள் பெட்ரோலிய பொருட்களை கள்ளச்சந்தைகளில் விற்பதைத் தடுக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

2. சென்னையும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் டீசல் கேட்பு கடந்த சில மாதங்களாக அதிகரித்துள்ளதன் காரணமாக போக்குவரத்து மற்றும் தொழில் துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தேவையான அளவு டீசல் (மு.ளு.னு. டீடை) இருப்பு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று 18.08.2008 அன்று மாண்புமிகு மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழக உணவு அமைச்சர் அவர்களால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், தமிழகத்திற்கு வழங்கப்பட்டுவரும் 4.2 இலட்சம் கிலோ லிட்டர் அளவிலான ஒதுக்கீட்டினை உயர்த்தி கூடுதலாக 75,000 கிலோ லிட்டர் டீசல் ஒதுக்க வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய பெட்ரோலியத்துறை அமைச்சருக்கு 25.8.2008 அன்று கடிதம் எழுதியுள்ளார்கள். மாநில அளவில் நிலையை உணவு அமைச்சரே இதை நேரடியாக தினமும் கண்காணித்து ஆய்வு செய்து வருகிறார்.

3. இதனிடையில் இன்று செய்தி தாள்களில் பெட்ரோல் விற்பனையாளர்கள் சங்கம் தற்போது 24 மணி நேரம் செயல்பட்டுவரும் பங்க்குகளை செப்டம்பர் 15–ம் தேதி முதல் இரவு 10 மணி முதல் காலை 6 மணிவரை மூடவும், ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடவும் தீர்மானித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன. இதைத் தொடர்ந்து இன்று (26.8.2008) காலை தலைமைச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில எண்ணெய் நிறுவன ஒருங்கினைப்பாளரும் பெட்ரோல் விற்பனையாளர் சங்கப் பிரதிநிதியும் கலந்துகொண்டனர். பெட்ரோல், டீசல் விநியோகம் அத்தியாவசியப் பொருள் என்பதாலும், பெட்ரோல் பங்குகள் இன்றியமையா சேவைப் பணி என்பதாலும், இத்தகைய கட்டுப்பாடுகள் சட்ட விரோதமானது என தெரிவிக்கப்பட்டு பெட்ரோல் பங்க்குகள் வெளியிட்டுள்ள மேற்கண்ட அறிவிப்பினை உடனே விலக்கிக் கொள்ளவும் பெட்ரோல் பங்க்குகள் இயல்பான முறையில் தொடர்ந்து செயல்படவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. எண்ணெய் நிறுவனங்களும் புகார்களுக்கு இடமளிக்காமலும், பெட்ரோல் பங்க்குகளில் டீசல் இருப்பு குறைவு அல்லது இல்லாமை ஏற்படாதவாறு டீசல் விநியோகிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆகையால், பொதுமக்கள் எந்த அச்சமுமின்றி தேவைக்கு ஏற்ப மட்டுமே டீசல் வாங்கவும் பதட்டத்துடன் தேவையில்லாமல் கூடுதல் இருப்பு வைப்பதையும் தவிர்க்கவும் கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.